RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| திரை: 03 | மொழி : 4 | நவம்பர் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
| --- | --- | --- | --- | --- |
| Volume : 03 | Issue : 4 | November - 2025 | Page: 8 | Price: Rs. 10 |


RKFI

## நூறாண்டு தமிழ் சினிமாவில்

# ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனலின் பங்கு



எத்தனையோ நிறுவனங்கள், கலைஞர்கள் தமிழ்த் திரைப்பட உலகில் பெரும் பங்கை ஆற்றி உள்ளனர்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் துவங்கி, விஜயா வாஹினி, ஏவிஎம், கற்பகம், வீனஸ், பரணி, பிரசாத், சத்யா, தேவர் பிலிம்ஸ், ஜெமினி இன்னும் பல நிறுவனங்கள் கை கொடுத்துள்ளன.

கண்ணதாசன் கவிஞர் என்றாலும் தானும் திரைப்பட தயாரிப்பில் ஈடுபட்டார் என்பதே கலை உண்மை.

அந்த வகையில் 1954ல் களத்தூர் கண்ணம்மாவில் குழந்தை நட்சத்திரமாக கமல்ஹாசன் நடிக்கத் துவங்கி, இடைப்பருவ காலத்தில் நடனம், இயக்கத்துணை என சூழலுக்கேற்ற வகையில் தகவமைத்துக்கொண்டு, பின் கதை நாயகனாகி, பின் கதாநாயகன் உயர்வைப்பெற்று வளர்ந்தார் என்பது நிதர்சனம்.

பல்வேறு இயக்குநர்களால், ஏன் மலையாளக் கலைஞர்கள் கூட கை கொடுத்து உயர்த்திய வேளையில் தன்னை அடையாளப்படுத்தி கலைத்தன்மையைக் கூட்டிய தமிழ் உலகுக்கு மேலும் ரசனைத்தன்மையை கூட்ட வேண்டுமென கருதினார்.

அந்த நிலையில் உருவானது தான் ஹாசன் பிரதர்ஸ் என்ற கமல் ஹாசனின் நிறுவனம். முதன் முதலில் ராஜ பார்வை என்ற படத்தை தயாரித்ததோடு, கமல் கதையும் எழுதினார். கண்ணதாசன் பாடல்கள். இளையராஜா இசை. இயக்குநர் சிங்கீதம் சீனிவாசராவ்.

அது ஒரு பார்வையற்ற இளைஞனின் காதல் பற்றிய உணர்வுக் கோர்வை. அதில் சந்தானபாரதி திரைக்கதையில் உதவினார்.

அச்சூழலில் சுப்ரமண்யராஜி, பாலகுமாரன், பாலன், ரமணன், சுஜாதா ஆகிய நண்பர்கள் உடனிருந்த நேரம்.

பிறகு, ஐந்தாண்டுகளுக்குப்பின்

**அன்புடை ரஜினி, காற்றாய் அலைந்த நம்மை இறுக்கி கிறுக்கி தனதாக்கியது சிகரத்தின் இரு பனிப்பாறைகள் உருகி வழிந்து இரு சிறு நதிகளானோம். மீண்டும் நாம் காற்றாய் மழையாய் மாறுவோம். நம் அன்புடை நெஞ்சார நம்மைக்காத்த செம்புலம் நனைக்க, நாமும் பொழிவோம் மகிழ்வோம். வாழ்க நாம் பிறந்த கலை மண்**

2025

விக்ரம். இது அப்போது அதிக பட்ஜெட்டில் எடுத்த படம். ஒரு கோடியைத் தாண்டியது. முதலில்



மணிரத்னம்தான் இயக்கப் பரிசீலிக்கப்பட்டார். ஆனால், அவர் அப்போது இயக்குநரல்ல. எனவே, அனுபவம் வாய்ந்த இயக்குநர் ராஜசேகர் தேர்வு பெற்றார். பிறகு ஹாசன் பிரதர்ஸ் நிறுவனம் ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர் நேஷனல் நிறுவனமாக மாறி தொடர்ந்து சத்யராஜை ஹீரோவாக்கி கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற படத்தை நண்பர் சந்தான பாரதியை இயக்க வைத்தார் கமல்.

அடுத்து பாலசந்தரிடம் பணியாற்றிய சுரேஷ் கிருஷ்ணனுக்கு சத்யா என்ற படத்தை இயக்கப் பணித்தார். வேலையில்லா பட்டதாரி இளைஞன் கதை.

இந்த சமயத்தில்தான் நான் கமல்ஹாசன் அழைப்பில் ராஜ் கமல் இன்டர் நேஷனில் உதவி இயக்குநராக பணிக்குச் சேர்ந்தேன்.



பக்கம் 7ல் தொடரும்



# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-8

**V.V.பிரசாத்**

(தீ சினிமா ரிசோர்ஸ் செண்டரின் ஆவனக்காப்பாளர்)

*(தீ சினிமா ரிசோர்ஸ் செண்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)*



ராஜசேகரன் படத்தில் நடிகர் M.R. ராதா


அனாதைப்பெண் படத்தில் நடிகர் M.K. ராதா

1937ம் ஆண்டு ராஜசேகரன் படத்தின் மூலமாக புகழ்பெற்ற நடிகர் M.R. ராதா என்று அழைக்கபட்ட மெட்ராஸ் ராஜகோபால ராதா கிருஷ்ணன் அறிமுகம் ஆனார். பிற்காலத்தில் நடிகவேள் என்று அழைக்கபட்ட ராதா திராவிட கொள்கைகள் மீது நம்பிக்கை கொண்டவராக இருந்தார். மேடை நாடகங்கள் மற்றும் திரைப் படங்கள் மூலமாக நாத்திகத்தையும் சமூக சீர்திருத்தங்களையும் பிரசங்க படுத்தி வந்தார்.

அனாதை பெண் பெரும்பாலான திரைவல்லுனர்களால் R.S. பிரகாஷின் சிறந்த படமாக கருதப்படுகிறது. இப்படம் வை.மு.கோ என்று அழைக்கபட்ட வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல் தழுவி எடுக்கப்பட்டது. பல வெற்றி நாவல்களை எழுதிய இவர் துப்பறியும் கதைகளையும் எழுதியிருந்தார். பெண் எழுத்தாளர்களிடையே இது அக்காலக்கட்டத்தில் அரிது. அவரே எழுதி, தொகுத்து பிறகு வெளியிட்டு ஜகன்மோகினி என்ற பத்திரிக்கை நடத்தி வந்தார். அப்பொழுது இப்பத்திரிக்கை மிக பிரபலமாக இருந்தது. அவர் எழுதிய நாவல்களில் மிக பிரபலமானது அனாதை பெண் ஆகும். இதுவே படமாக எடுக்க பட்டது.

M.K. ராதா என்று அழைக்கப்பட்ட மெட்ராஸ் கந்தசாமி ராதாகிருஷ்ணன் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்டார். T.A. சுந்தராம்பாள் கதாநாயகியாக நடித்தார். உண்மையில் M.K. ராதா அவர்களை தேர்ந்தெடுத்தது வை.மு.கோ தான். அந்த வேடத்தில் அவர் மட்டுமே நடிக்க வேண்டும் என குறிப்பாக இருந்தார். காரணம் கதை எழுதும் பொழுதே அவரை மனதில் வைத்தே எழுதப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார். படத்தின் கதாநாயகனை ஒரு எழுத்தாளர் தேர்ந்தெடுத்தது இந்தியாவிலேயே இதுவே முதல் முறை என கூறலாம்.

M.K. ராதாவிற்கு அனாதை பெண் அவரது சினிமா வாழ்க்கையின் முக்கிய படமாக அமைந்தது. அவருக்கென்று தனி பாணி உறுவாகி பிரபலம்





Raghupathi Venkaiah Awards

அடைந்தது. ரசிகர்கள் அவரை போலவே அவரது நடை உடை பாணியை பின்பற்ற தொடங்கினார்கள். சுந்தராம்பாள் துரதிர்ஷ்டவசமாக இந்த படத்திற்கு பிறகு அதிகமாக நடிக்க வில்லை. சுவாரஸ்யமான விஷயம் இப்படத்தில் பிற்காலத்தில் சூப்பர்ஸ்டார் ஆன P.U. சின்னப்பா வில்லன் வேடத்தில் நடித்திருந்தார். மற்றுமொரு ஜாம்பவான் கொத்த மங்கலம் சுப்பு நகைச்சுவை பாத்திரத்தில் நடித்திருந்தார்.

R.வெங்கையா அவர்களுக்கு போதுமான அங்கீகாரம் கிடைக்காதது துரதிர்ஷ்டவசமானது. சென்னை மாநகரத்துக்கு பல பெருமைகளை தந்த மறந்து போன ஜாம்பவான்களின் ஒருவராக இருப்பது வருத்தத்திற்குரிய விஷயமே. ஆனால் ஆந்திர மாநில அரசால் அவருடைய பெயரில் 'தெலுங்கு சினிமாவில் சிறந்த பங்களிப்புக்காக ரகுபதி வெங்கையா விருது' வழங்கப்படுகிறது. அவரும் அவரது மகனும் தென் இந்தியாவை சேர்ந்த பல ஜாம்பவான்களின் முன்னேற்றத்திற்கு பாதை அமைத்து கொடுத்திருக்கிறார்கள். இன்றைய இந்த செழிப்பான தென் இந்தியாவின் திரைப்படத்துறையின் நிலைமைக்கு இந்த தந்தை மகன் ஜோடியின் பங்கு மிகப்பெரியது என்று சொன்னால் மிகை ஆகாது.

தொடரும்...

திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

## நட்பு...

மூன்றெழுத்து மந்திரம்
முற்றுமிங்கு தகர்ந்திடும்
ஒன்றிடுவோம் நிரந்தரம்
மறந்திடுவோம் இயந்திரம்

பிரிவுமிங்கு பறந்திடும்
பிரியமென்றும் பெருகிடும்
அறிவுமிங்கு கூடிடும்
அருமருந்தென ஆகிடும்

வஞ்சமதை வென்றிடும்
நெஞ்சிலன்பு நிலைபெறும்
தஞ்சமொன்றை ஏற்றிடும்
தாங்கிக்கொள்ள தூண்டிடும்

உரிமைகொண்டு வந்திடும்
நானுண்டு என்றிடும்
உடைந்துப்போக மறுத்திடும்
உடைவாளாய் காத்திடும்

தடுமாறும் நிலைவரின்
தாங்கியே பிடித்திடும்
தடம்மாறும் சூழலில்
தடுப்பணையாய் நின்றிடும்

சாதிமத பேதங்கள்
நாதியற்று போயிடும்
சங்கமிக்கும் நேரங்கள்
அங்கமெலாம் நிறைந்திடும்

தோள்மீது கரமிட்டு
தோழமைப் பாராட்டும்
தோல்வியே வந்தாலும்
தோற்காமல் உரமூட்டும்

சினந்தே பேசினாலும்
உணர்ந்தே வந்திடும்
சிதைந்துப் போகாமல்
சிந்தனையில் நின்றிடும்

என்னதவம் செய்தேமோ
இங்கு நாங்கள் நட்பாக
எல்லோரும் நட்பினை
நினைப்போமே கற்பாக

உப்பிலா உணவது
குப்பையில் சேர்ந்திடுமே
நட்பிலா வாழ்வது
நரகத்தில் சேர்த்திடுமே...



கவிஞர் ஜெ. பார்வதி
கணித பட்டதாரி ஆசிரியை
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கீழ்முட்டுக்கூர், கீ.வ.குப்பம் ஒன்றியம்
வேலூர் மாவட்டம்.

# ஒண்டிமுனியும் நல்லபாடனும் அதிகாரப் போரில் சிக்கிய மண்ணின் கதை




நல்ல சினிமா என்பது குறிப்பிட்ட நிலத்தின் பண்பை மக்களின் வாழ்வியலை அதன் வடிவம் மாறாமல் அப்பட்டமாக காட்டுவது. இப்படியான ஒரு படம் ஒண்டிமுனியும் நல்ல பாடனும். மிக எளிமையான அற்புத மான படம் என்று இதை சொல்லலாம்.

இப்படி ஒரு படத்தை இயக்கிய இயக்குநருக்கும் இதன் தயாரிப் பாளருக்கும் நாம் வாழ்த்துக்களை மனமார சொல்லுகிறோம். காரணம் ஒரு நிலத்தின் வாழ்வியலை பிறந்த குழந்தையை போல அப்பட்டமாக சொல்லுகிற படம். உலகில் பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம் அப்படியான ஒரு அப்பட்டமான சினிமாவாக இதை சொல்லலாம். நல்லபாடனாக நடித்திருக்கும் நடிகர் 'பரோட்டா' முருகேசன் மிக அற்புதமாக வாழ்ந்து இருக்கிறார்.

சில வேலைகளில் மிக சிறப்பான நடிப்பில் கொஞ்சம் நாடக பாவனை இருக்கும் அதை கூட கதாபாத்திரத் தோடு ஒன்றி வாழ்ந்தார் என்று சொல்வார்கள் ஆனால் உண்மையில் இந்த படத்தில் நல்லபாடன் கதாபாத்திரமாகவே அப்பட்டமாக வாழ்ந்திருக்கிறார்.

இந்த படத்தை முறையாக உலகத் திரைப்பட விழாக்களுக்கு அனுப்பினால் நிச்சயம் ஏராளமான விருதுகளைக் குவிக்கும். ஏனெனில், அவ்வளவு சிறந்த படமாக இருக்கிறது. மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள்.

மிகைப்படுத்தாத கதாபாத்திரங் கள் எதார்த்தமான வாழ்வில் படிமம். மக்களின் நம்பிக்கை, அந்த நம்பிக்கைக் காக அவர்கள் படுகிற பாடு என வறுமையிலும் நம்பிக்கை அதைத் தாண்டி துயரத்தில் இருக்கும் ஒரு மனிதனுக்கு தனது ஆதரவை காட்டும் கிராமத்து எளிய மனிதர்கள் என அத்தனையும் மிகச் சிறப்பாக செய்திருக் கிறார்கள். இந்த தயாரிப்பாளருக்கு தான் மிக அதிகமாக நன்றி சொல்ல வேண்டி இருக்கிறது. காரணம் இன்றைய சூழல் அப்படி அதையெல்லாம் தாண்டி ஒரு சிறந்த கதைக்கு தயாரிப்பாளராக முன்வருகிற ஒருவரை அவசியம் பாராட்ட வேண்டும். சினிமாவை மட்டுமல்ல இந்த சமூக அமைப்பை புரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம் இது.

**- கரண் கார்கி, எழுத்தாளர்**

புதிய சிந்தனைகள், புதிய நடிகர்கள், புதிய இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் கூட்டணியில் 'ஒண்டிமுனியும் நல்லபாடனும்' திரைப்படம், சமகால யதார்த்தத்தைப் பேசும் ஓர் உன்னதக் கதைக்களம். அதிகாரப் போட்டிகள், உழைப்புச் சுரண்டல் மற்றும் நிலவுரிமைப் போராட்டங்களை மிக நுட்பமாக ஆழமாகப் பதிவு செய்திருக்கிறது. இது அனைவரும் கொண்டாட வேண்டிய ஓர் முக்கியமான சமூகப் படைப்பு.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிருக்குப் போராடும் பதட்டமான காட்சியுடன் கதை தொடங்குகிறது. இறுதிவரை இந்த நேர்த்திக் கடன் நிறைவேற்றப்படுமா? என்ற சஸ்பென்ஸுடன் நகரும் திரைக்கதை, கிராமத்து அரசியலையும், அதன் விளைவுகளையும் மிக நுட்பமாக நம் கண்முன் நிறுத்துகிறது.

சாதிய வெறியும் இறுக்கமும்: நண்பர்களாகப் பழகினாலும், திருமண உறவு என்று வரும்போது மட்டும் விட்டுக் கொடுக்காத சாதிய வெறியின் இறுக்கம் அழுத்தமாகப் பேசப்பட் டுள்ளது. மேலும், வரதட்சணை போன்ற சீர்கேடுகளும் சமூகத்தின் மீதான பார்வையைப் பதிவு செய்கின்றன. திரைக்கதையின் ஒவ்வொரு வசனமும் அதிக வீரியத்துடன் உள்ளது. ஒற்றை வரியில் பல தலைமுறைகளின் சமூக வரலாற்றைச் சொல்லிச் செல்கிறது.

கதையின் நாயகன் புரோட்டா முருகேசன் நடிப்பு, உயிரோட்டமானது. வறண்ட நிலங்களில் ஓடுவதும், உழைப்பையும் உணர்வுகளையும் பதிவு செய்யும் உடல்மொழி, ஆடை வடிவமைப்பு, மேக்கப் என அனைத்தும் இயல்பாகவும் யதார்த்தமாகவும் உள்ளன.

அனைவரும் திரையில் குடும்பத்தோடு கண்டுகளிக்க வேண்டிய ஓர் அற்புதமான படைப்பு என்பதில் ஐயமில்லை. திரைப்பட குழுவிற்கு அன்பு வாழ்த்துகள்.

**- அர்ஷா, எழுத்தாளர்**

நிலங்களற்ற மனிதர்களின் கதை சினிமாத்தனம் இல்லாத சினிமாவாக உருவாகியிருக்கிறது.



இயக்குநர் சுகவனம்

'நிலத்தில் நன்கு உழைக்கும் பாட்டாளியை நல்லபாடன் என்ற ழைப்பது கொங்கு வட்டார வழக்கம் என்பதும் ஒண்டிமுனி என்ற சிறுதெய்வத்தின் மீது சாதாரண உழைக்கும் மக்கள் கொண்ட நம்பிக்கை, காதல் உணர்வுக்குச் சமுதாயம் கொடுக்கும் முக்கியத்துவம், பைக் வைத்திருப்பவனைப் பார்க்கும் இளம்பெண் அந்த இளைஞனைக் காதலிக்க விரும்புகிறாளா? இப்படி எல்லாவற்றையும் தோலுரித்துக் காட்டுகிறது படைப்பு.

நல்லபாடனாக 'பரோட்டா' முருகேசன் நடித்திருக்கிறார். விமலின் ஒளிப்பதிவும் 'மூடர்கூடம்' நடராஜன் சங்கரன் இசையும் அழகு சேர்த்திருக்கின்றன.

திருமலை புரொடக்ஷன் சார்பில் கே.கருப்புசாமி, அமராவதி இணைந்து தயாரித்திருக்கின்றனர். இயக்குநர் சுகவனம் மற்றும் படக்குழுவினரை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

**- பேராசிரியர் மஞ்சுளா**



# திரைப்பட விழாக்களில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏன்?

ராஜ்மோகன் சுப்ரமண்யன்

கடந்தவாரம் டிஸ்கவரி புக் பேலஸில் ஒரு புத்தகம் வாங்க சென்றபோது நண்பர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. நீண்ட நாட்களாக திரைப்படத்துறையில் சாதிக்க வேண்டும் என்று போராடிக்கொண்டி ருக்கும் நபர். என்னை பார்த்தவுடன் உற்சாகமானர்' 'தோழர்! உங்களை தான் சந்திக்க வேண்டும் என்றிருந்தேன் நீங்களே வந்துவிட்டீர்கள்' என்று முகம் மலர்ந்தார். எனக்கும் நண்பரை சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி. இருவரும் தேனீருடன் அமர்ந்தோம். நண்பர் சொன்னார்.... 'நீங்கள் தான் அடிக்கடி திரைப்பட விழாக்களை பற்றி சொல்லிக்கொண்டிருப்பீர்கள். நான் ஒரு சின்னப் படம் எடுத்தேன்.(சின்னப்படம் பெரிய படம் என்று ஏதுமில்லை. ஒரு கதைக்கு என்ன தேவையோ அதுதான் செலவு). அதனை சில விழாக்களுக்கு அனுப்பினேன். ஏறக்குறைய பல விருதுகள் பெற்றிருக்கிறது. ஆனா இந்த படத்தை விற்க முடியவில்லை. மேலும் எனக்கு இந்த விழாக்களினால் ஒரு அங்கீகாரம் கூட கிடைக்கவில்லை. எனது படம் விருது வாங்கி விட்டது என்று நான்தான் சொல்லிக்கொண்டி ருக்கிறேன். ஆனால், வெளியில் அதற்கு அப்படியொரு மதிப்பு இருப்பதாக தெரியவில்லை' என்றார்,




நண்பர் சொல்வதில் உண்மை இருந்து. அவர் படத்தின் போஸ்டர் வடிவத்தை காண்பித்தார். ஏறக்குறைய ஆறு விருதுகள் பல்வேறு பிரிவுகளில் வென்றிருக்கிறது. ஆனால் அதில் உண்மை என்னவெனில் ஒன்று கூட அங்கீகரிக்கப்பட்ட பெரும் விழாக்கள் அல்ல. என்ன இது புது கதையாக இருக்கிறது. விருது அமைப்புகளை யார் அங்கீகரிப்பது? இதனை எப்படி புரிந்துகொள்வது என்று கேள்வி எழலாம்.

ஆமாம்! இந்திய திரைப்பட சந்தை வளர்ந்துகொண்டிருக்கும் இன்றைய சூழலில் விருதுகள் பற்றிய புரிதல் மிக அவசியம். ஒரு திரைப்பட விழாவிற்கு நீங்கள் உங்கள் படைப்பை அனுப்பும் முன்பு கேள்விகளை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். ஏன் எனில் எல்லா திரைப்பட விழாக்களும் நீங்கள் விரும்பும் பலனை தராது. எது தகுதி வாய்ந்த திரைப்பட விழா என்று அறிந்துகொண்டு செயல்படும் போதுதான் நீங்கள் எதிர்பார்க்கும் பலனை பெற முடியும்.




### 1. படைப்பின் அங்கீகாரம் (Recognition)

உங்கள் திரைப்படம் பெரிய திரையில், விமர்சகர்கள், ரசிகர்கள், மற்றும் திரைப்பட வல்லுநர்கள் முன் திரையிடப்படவேண்டும். ஏன் எனில் உங்கள் படைப்பு உங்களின் கலைத் திறனை உலகம் அறிய செய்யும் முதல் வாய்ப்பு. நீங்கள் தேர்ந்தெடுக்கப் படும் திரைப்பட விழாக்கள் எத்தனை வருடமாக நடக்கிறது. எத்தகைய படைப்பாளிகள் கலந்து கொள்கின்றனர். யாரெல்லாம் முன்பு விருது பெற்றிருக் கின்றனர் என்பதை தெளிவாக புரிந்துகொள்வது அவசியம். தற்போது நிறைய திரைப்பட விழாக்கள் நிகழ்கின்றன. அவை தரும் சான்றிதழ்கள் நமக்கு மகிழ்ச்சி அளிக்கலாம். உண்மை யில் அந்த விருதுகள் அங்கீகாரம் தராது. ஏன், உங்கள் படங்களை விற்க முடியாது. கான்ஸ், பெர்லின், வெனிஸ், ரோட்டர்டம் போன்ற திரைப்பட விழாக்களை இலக்கு வைத்து செயல்படவேண்டும். இத்தகைய விழாக்களில் ஒரு சிறந்த படம் விருது பெற்றால், அது உலகளாவிய கவனம் பெறும்.

### 2. தொழில் வாய்ப்புகள் (Professional Opportunities)

நம்ம ஊரில் நாம் பார்க்கும் இன்னொரு விடயம். என்னிடம் நல்ல கதை இருக்கிறது. அதனை ஓ.டி.டி. க்கு விற்க முடியுமா என்ற கேள்வி? இன்று பல ஓ.டி.டி.க்கள் தங்களுக்கான படங்களை திரைப்பட விழாக்களில் தான் கொள்முதல் செய்கின்றன. நீங்கள் பங்கெற்கும் திரைப்பட விழாக்கள். *Producers, Distributors, OTT executives, Festival curators, Script labs* போன்றவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்புள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இந்த முறை இல்லாவிட்டாலும் அடுத்த முறை உங்கள் அடுத்த திட்டத்திற்கான பட்ஜெட், *distribution, co-production deals* இதே விழாவில் உருவாகலாம். எடுத்துக்காட்டு: *IFFI, Busan, Berlinale, Cannes* போன்ற விழாக்களில் ஒரு சிறந்த *short film* கூட *Netflix / Amazon* போன்ற தளங்களால் கவனிக்கப்படும்.

### 3. நெட்வொர்க் (Networking)

கூட்டு முயற்சி. நமக்கு கைவந்த கலைதான். எப்பொழுதும் நண்பர்களின் சூழலில் வாழ்கிறோம். நாம் சினிமா பேசும் விதமே அலாதியானது. காவேரி தெருமுனை தேனீர் கடைகளோ அல்லது கிடைக்கும் ஒரு மரநிழல்களோ கூட நமக்கு கதை பேசும் களம்தான். இதை கொஞ்சம் மாற்றி நமது திரைப்பட விழாக்கள் வரை கொண்டு செல்ல வேண்டும். நண்பர்களாக இணைந்து திரைப்பட விழாக்களுக்கு பயணிக் கலாம்.நாம் இங்கு பெற்ற நட்புகளை போன்று அங்கும் பல நட்புகள் குறிப்பாக சர்வதேச நட்புகள் நமக்கு கிடைக்கலாம். இந்த கூட்டணி பல புதிய முயற்சிகளுக்கு அடித்தளமாக அமையும்.திரைப்பட விழா என்பது ஒரு *"creative marketplace"*. நீங்கள், உங்களைப் போன்ற இயக்குநர்கள், எழுத்தாளர்கள், DOPக்கள், இசை யமைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் போன்றவர்களை சந்திக்கலாம். இதன் மூலம் நீண்டகால கூட்டாண்மை உருவாகலாம்.




### 4. கல்வி மற்றும் கற்றல் (Learning)

**நாம் கவனித்த வரை படைப்புத் துறையில் இருப்பவர்கள் கற்றலை எங்கோ ஒரு இடத்தில் நிறுத்திவிடு கின்றனர். ஆனால், மேலை நாடுகளில் ஒரு படைப்புக்கும் இன்னொரு படைப்புக்கும் இடையே கற்று கொள்வதற்கு என்றே பெரும் இடைவெளியை எடுக்கின்றனர். அவதார் தந்த ஜேம்ஸ் கேமரூன் அந்த படம் எடுக்கும் முன்பு அதுகுறித்து பல ஆண்டுகள் ஆய்வு மேற்கொண்டார்.**




நம்ம ஊரை எடுத்துகொண்டால் கமல் சார் சமீபத்தில் ஏஐ நுட்பம் படிக்க அமெரிக்க சென்றார் என்பது குறித்து படித்து மகிழ்ந்தோம். அவர் செய்கிறார் என்று மகிழாமல் நாமும் கற்றலில் அதிகம் கவனம் செலுத்தவேண்டும்.பல விழாக்களில் *workshops, panel discussions, masterclasses* நடத்தப்படும். உலகத் தரம் வாய்ந்த இயக்குநர்கள் தங்களின் அனுபவம், *script development, film marketing, festival strategy* ஆகியவற்றை பகிர்ந்து கொள்வார்கள். நீங்கள் ஒரு திரைப்படப் பள்ளிக்கு போகாமல் கூட, ஒரு விழாவில் பங்கேற்பதன் மூலம் நிறைய கற்றுக்கொள்ளலாம். கமல் சார் போன்று அமெரிக்க செல்ல முடியவில்லை என்பவர்களுக்கு *Coursera, Udemy* போன்ற தளங்கள் வெறும் 500 ரூபாயில் இதனை பயிற்று விக்கின்றன. இலவசமாக *Studio Binder* போன்ற தளங்கள் உலக சினிமா மொழியை சல்லிசாக நம் வீட்டிற்கே கொண்டு வந்து சேர்க்கின்றன. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. தினமும் பத்து ரீல்ஸ் பார்க்கும் நாம் அதில் ஐந்து ரீல்ஸ் பார்ப்பதை தவிர்த்துவிட்டு இந்த தளங்களில் மேய்ந்தால் வெற்றி நிச்சயம்.

### 5. உலக மேடை (Global Exposure)

ஒரு திரைப்பட விழா வெளிநாட்டில் நடப்பதாலோ அல்லது இண்டர்நேஷனல் பிலிம் பெஸ்டிவல் என்று பெயர் தாங்கி வருவதாலோ மட்டும் அது உலகப்படமாகிவிடாது. உண்மையில் உலக அளவில் பங்கேற்புகள் இருக்கவேண்டும். குறிப்பாக பல நாடுகளின் கலாச்சார தூதரகங்கள் இவ்விழாவில் பங்கேற்றால் உங்கள் படம் அவர்களால் கவனிக்கப்படலாம். எனவே, இவ்விழாவுக்கு சர்வதேச அங்கீகாரம் எப்படி உள்ளது என்பதை தெளிவாக தெரிந்து தெளிந்து கொள்ளுதல் அவசியம். ஒரு நல்ல படம் சர்வதேச விழாக்களில் திரையிடப்படும் போது, அது India's voice to the world ஆக மாறும்.இதன் மூலம், your storytelling, your culture, your identity உலகத்திற்கு வெளிப்படும். உதாரணமாக கோவா திரைப்பட விழா, கேரளா அரசின் திரைப்படவிழா, கொல்கத்தா திரைப்பட விழாக்களை சொல்ல முடியும். இங்கு குறைந்த பட்சம் 80 நாடுகள் பங்கேற்கின்றன. 200 க்கும் அதிகமான திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

### 6. விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் (Awards & Recognition)

ஒவ்வொரு திரைப்பட விழாக்களுக்கும் அதன் பெருமிதம் தருகின்றன. இந்திய சர்வதேச திரைப்பட விழாவை எடுத்துக் கொண்டால் தங்கமயில் விருது, வெள்ளி மயில் விருது, யுனஸ்கோ – காந்தியன் விருது, ஜூரி விருது ஆகியவை முக்கியமானவை. நாம் உருவாக்கும் படம் எந்த விருதுக்கு பரிந்துரை செய்ய உகந்தவை என்பதை முன்பே முடிவு செய்து அதற்கு விண்ணபிக்கவேண்டும். முன்பே இவ்விருதுகள் பெற்ற படங்களை ஆய்வு செய்து நமது படத்தின் தன்மையும் அத்துடன் ஒத்து போகின்றனவா என்பதை தெரிந்து கொண்டு கலந்துகொண்டால் துல்லியமாக விருதை பெறலாம். பொதுவாக விருதுகள் Official Selection, Jury Award, Audience Choice Award போன்றவை உங்கள் career brandingக்கு பெரும் துணை. இது உங்கள் IMDb, press coverage, OTT negotiations எல்லாவற்றையும் மேம்படுத்தும்.




### 7. Distribution & Fund Access

மீண்டும் இந்த கட்டுரையின் முதல் பத்திக்கு வருவோம். நண்பரின் வருத்தம் தனது படம் ஆறுக்கும் மேற்பட்ட விருதுகள் வென்றும் தன்னுடைய படங்களை விற்க முடியவில்லை என்ற ஆதங்கம். காரணம் அவர் கலந்துகொள்ள அனுப்பிய விழாக்கள் எல்லாம் பெரும் அங்கீகாரம் பெற்ற விழாக்கள் அல்ல. நல்ல படமாக இருந்து நல்ல விழாவில் திரையிட்டால் வினியோகம் சாத்தியப்படும். சில விழாக்கள் pitching sessions நடத்தும் (எ.கா. Kerala Film Market, NFDC Film Bazaar). நீங்கள் அங்கே உங்கள் திட்டத்தை pitch செய்தால், funds / co-producers / sales agents கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

### 8. உள் மாற்றம் (Personal Transformation)

ஒரு படைப்பாளிக்கு வாசிப்பது, பயணம் செய்வது மற்றும் நல்ல படங்களை பார்ப்பது என்று மூன்று அடிப்படை குணாதிசயங்கள் அவசியம். அதில் இன்றியமையாத இரண்டு, பயணமும் நல்ல படங்களை பார்ப்பதும். திரைப்பட விழாக்கள் இதுபோன்ற மாற்றங்களை தரும்.

விழாவில் பங்கேற்பது, சினிமாவை நேசிக்கும் மக்களால் சூழப்பட்ட ஒரு சூழலில் வாழ்வது போன்றது. அது உங்களை ஒரு முழுமையான சினிமா மனிதராக மாற்றும் — பார்வை, செவியுணர்வு, கதை சொல்லும் திறன், மனித உணர்வு அனைத்திலும் ஆழம் பெறுவீர்கள்.

என் நண்பர்கள் கேட்பார்கள் நீங்கள் எப்படி வருடம் தவறாமல் திரைப்பட விழாக்களுக்கு செல்கிறீர்கள். இதனை நான் கேரள சேட்டன்களிடம் இருந்து கற்றுக்கொண்டேன். சேட்டன்களில் பலர் தொழில் முறை சினிமாக்காரர்களோ அல்லது இலக்கியவாதிகளோ இல்லாமல் சினிமா ரசிகர்களாக திரைப்பட விழாக்களில் கலந்து கொள்வதை பார்த்திருக்கிறேன். நம்ம ஊரில் ஐயப்ப சாமிக்கு மாதந்தோறும் சீட்டு போடுவதை போன்று கோவா திரைப்பட விழா சீட்டு என்று சிறுக சிறுக சேமித்து விழாக்களில் கலந்துகொள்கிறார்கள். நான் அவர்களிடம் கற்றுக்கொண்ட பாடம். இப்படிதான் மாதம் மாதம்கொஞ்சம் சேமித்து கோவிலுக்கு செல்லும் பாவனையுடன் திரைப்பட விழாக்களுக்கு செல்வதை விரும்புகிறேன். ஏன் எனில் செய்யும் தொழிலே தெய்வம் தானே?

## இந்திய இயக்குநர்களுக்கான முக்கிய விழாக்கள்

| விழா | இடம் | காலம் | சிறப்பு |
|---|---|---|---|
| IFFI – International Film Festival of India | கோவா | நவம்பர்–டிசம்பர் | இந்தியாவின் மிகப் பெரிய சர்வதேச விழா |
| IFFK – International Film Festival of Kerala | திருவனந்தபுரம் | டிசம்பர் | வலுவான கலைத் திரைப்படங்கள் மற்றும் ஆசியா–ஆஃப்ரிக்கா பிரிவு |
| NFDC Film Bazaar | கோவா | நவம்பர் | இந்திய சினிமாவின் முக்கிய மார்க்கெட் & Pitching Platform |
| Kerala Film Market (KFM) | திருவனந்தபுரம் | டிசம்பர் 13–16, 2025 | புதிய இயக்குநர்களுக்கான co-production, OTT, networking வாய்ப்பு |
| Busan International Film Festival | தென் கொரியா | அக்டோபர் | ஆசியாவின் மிகப்பெரிய Independent film platform |
| Rotterdam (IFFR) | நெதர்லாந்து | ஜனவரி | புதிய சினிமா பார்வைகள், artist-first approach |
| Sundance Film Festival | அமெரிக்கா | ஜனவரி | Independent filmmakers' world stage |




## தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர்கள் சங்கம் நடத்திய

# "மகாகவி" ஈரோடு தமிழன்பனுக்கு மாபெரும் விழா



மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் 92வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர்கள் சங்கத்தின் சார்பில், சங்கத்தின் நிறுவனத் தலைவர். கவிஞர். தமிழமுதன் மற்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் புரட்சிக்கனல். இளைய கம்பன் அவர்களின் தலைமையில் கவிஞர். கு.தென்னவன், முனைவர். அ.பழமொழிபாலன் இருவரின் ஒருங்கிணைப்பில், 92 கவிஞர்கள் பங்கேற்ற மாபெரும் கவியரங்கம் மற்றும் கருத்தரங்கம், மயிலாப்பூர் சி.ஐ.டி. நகர், கவிக்கோ அரங்கத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

கவிஞரின் 92வது பிறந்த நாள் என்பதால் 92 கவிஞர்களை ஒருங்கிணைத்து, 13 குழுக்களாக பிரித்து, கவிஞர். வானரசன், கவிஞர். எழில் சோம. பொன்னுசாமி, கவிஞர். கவிதண்டபாணி, இயக்குநர். பாலி ஸ்ரீரங்கம், கவிஞர். தே. சு. கவுதமன், கவிஞர். முத்தமிழ், பேராசிரியர், தங்க. பழனிவேல், கவிஞர். நிகரன், கவிஞர். ஆர்.ஜெ.நாகா, கவிஞர். செங்கதிர் வாணன், கவிஞர். வள்ளி பாபு, கவிஞர். அ. இசை, கவிஞர். ஐயாறு புகழேந்தி என, இந்த 13 கவிஞர்களின் தலைமையில் 13 அமர்வாக, 13 கவியரங்கம், 9 வயதில் தொடங்கி 90 வயதை கடந்த 92 கவிஞர் பெருமக்களும் திருச்சி, தஞ்சாவூர், புதுவை, கடலூர், காரைக்கால், விழுப்புரம், வேலூர் கல்லக்குறிச்சி நெய்வேலி, மதுரை போன்ற தமிழகத்தின் பல்வேறு திசைகளில் இருந்து, வந்து மகாகவிஞருக்கு கவிதைகள் பாடி விழாவிற்கு சிறப்புகள் சேர்த்தார்கள்.

அது மட்டுமல்லாமல் திரைப்படப் பாடலாசிரியர்கள், கு. கார்த்திக், விஜய், முத்தமிழ், நிகரன், குகை. மா. புகழேந்தி, தொழிலதிபர் அமுதா பாலகிருஷ்ணன் போன்றவர்களெல்லாம் விழாவிற்கு வந்திருந்து விழாவிற்கு மெருகேற்றினார்கள். மற்றும் கூடல் நிலவன் எழுதிய "என் கவிதை வானம்" செங்கதிர்வானம் எழுதிய "வானை நிரப்பிய வண்ணங்கள்" என்கிற இரண்டு நூல்களும் வெளியிடப் பட்டது.

கவிஞர். தமிழமுதன் பாடல் வரிகளில் இசையமைப்பாளர். சுனில் எக்ஸ் இசையில், மகாகவி ஈரோடு தமிழன்பனை போற்றிப் புகழும் "வாழும் மகாகவி" என்னும் இசைத்தட்டு வெளியிடப்பட்டது. பாட்டுக் குயில்கள், "வாழ்க்கை" சகோதரிகள் அ. ப. சுப்ரஜா, அ. ப. சாதனா இருவரும் தங்களது அமுதக் குரலால் பாட, அரங்கமே அதிர்ந்து. கர ஒலிகளால் மனம் குளிர்ந்தது.

கருத்தரங்க அமர்வில், சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறை தலைவர். பேராசிரியர் வ. ஜெயதேவன் தலைமையில், புதுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இரவிக்குமார், பேராசிரியர் சொற்கோ. இரா.கருணாநிதி, புரட்சிக்கனல் இளையகம்பன் இவர்களின் கருத்தரங்கமும் நடைபெற்றது.

ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு, "மகாகவி" என்று விருது வழங்கப்பட்ட நேரத்தில், அவர் நான் எப்போது மகாகவியாக மாறுவேன் என்பதற்கு விளக்கம் கவிதை வாசித்தார்.

ஒரு கொல்லன் மகா கொல்லனாக மாறும்போது

ஒரு உழவன் மகா உழவனாக மாறும்போது

ஒரு தச்சன் மகா தச்சனாக மாறும்போது

நானும் ஒரு மகாகவிஞனாக மாறுவேன்.

என்று ஈரோடு தமிழன்பன் அவர்கள் குறிப்பிட்டதாக பேராசிரியர். வ.ஜெயதேவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

பேராசிரியர் ரவிக்குமார் அவர்கள் பேசும்போது ஜப்பானிய கவிதைகளை, சென்ட்ரியூகளை, கஜல் கவிதைகளை தமிழுக்கு தெரிவித்த பெரும்பணியை தமிழன்பன் அவர்கள்தான் முதலில் கொண்டு வந்தார். அவரை பல கவிஞர்கள் பின் தொடர்ந்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மரபுக் கவிதையின் புதிய புதிய வடிவங்களான காவடி சிந்து, பல்வேறு வகையான விருத்தங்கள், ஆசிரியப் பாக்கள் போன்ற பல்வேறு புதிய வடிவங்களை கொண்டு வந்தவர்.

அதைப்போலவே அவரின் மாணவரான ஈரோடு தமிழன்பன் அவர்களும் நவீன கவிதைகளில் புதிய புதிய வடிவங்களை பாடுபொருளாக பயன்படுத்தி, புதிய புதிய உத்திகளை கையாண்டு அவர் இந்த உயரத்தை அடைந்திருக்கிறார்.

உலகத்தில் நடைபெறுகிற பல்வேறு சமூக போராட்டங்களையும், சமூக இழிவுகளையும் உடனுக்குடன் தன்னுடைய கவிதையிலே பதிவு செய்து இந்த உலகிற்கு அர்ப்பணிக்கிற ஒரு பெரும்பணியை அவர் செய்கிறார்.

அது மட்டுமல்ல 92 வயதிலும் மொழிபெயர்ப்பு செய்கிறார். இந்த வயதிலும் அவருக்கு இருக்கக்கூடிய நினைவாற்றல் மிகவும் போற்றத்தக்கதாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர் படிக்கிறார். புதிய புதிய இலக்கியங்களை அவர் இறக்குமதி செய்கிறார் என்று ரவிக்குமார் குறிப்பிட்டார்.

இளையகம்பன் அவர்கள் பேசுகையில் ஈரோடு தமிழன்பன் பாவேந்தரின் தொடர்ச்சி. இளம் தலைமுறையினர் எழுதுவதற்கு அவர் ஒரு உந்துசக்தியாக இருக்கிறார். ஈரோடு இரு பெரும் மனிதர்களை தந்திருக் கிறது. அது பெரியாரை மட்டுமல்ல, ஈரோடு தமிழன்பன் என்கிற மகாகவியையும் நமக்கு தந்திருக்கிறது. ஆதலால் அவர் காலம் போற்றும் மகாகவியாக, நமது காலத்தில், இந்த நூற்றாண்டின் மகாகவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.


பேராசிரியர் சொற்கோ, கருணாநிதி பேசுகையில் அவரின் பெருமையை அடுக்குமொழி கவிதைகளால் பேசி அவருக்கு கவி மாலை சூட்டினார்.

மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் நூற்றாண்டு விழாவை, அவருடைய தலைமையில் 100 கவிஞர்கள் பாடுவதற்கான அந்த ஒப்புதலும் மேடையில் பெறப்பட்டது. உள்ளபடியே கவிஞர்கள் கூறும் வார்த்தைகள் பலிக்கும் என்று சொல்வார்கள். மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் தமிழ் உலகம் போற்றும்படி நூற்றாண்டை கடப்பார். நூறாண்டு காண்பார் என்று தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர்கள் சங்கம் வாழ்த்துகிறது.




கவிபாடும் கவிஞர்களின் அமர்வு

முதல் பக்க தொடர்ச்சி...
















'அபூர்வ சகோதரர்கள்' படம் எனக்கு வாய்ப்பளித்தது. அக்கால கட்டத்தில் கமல்ஹாசன் பெரிதாக கமர்ஷியலில் பயணிக்கவில்லை. எனக் காரணம் கூறி புறந்தள்ளும் சூழலில், கமல்ஹாசன் அப்பு - ராஜா என்ற இரு கதாபாத்திரத்தை உருவாக்கி பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டு எவரும் எதிர்பார்க்காத வெற்றியைத் தந்தார். மலேசியாவில் மூடும் சூழலில் இருந்த தியேட்டர்களை மறுபடியும் ஓட வைத்தது அந்தப் படம்.


பிறகு தமிழ் திரையுலகம் வேலை நிறுத்தம் பற்றிய பிரச்சினையை தந்தபோது 'மகளிர் மட்டும்' என்ற படத்தை தயாரித்தது. கதை கமல்தான். நாசர் ஹீரோவாக்கப் பட்டார். வெற்றி வாகை சூடியது.பிறகு 'தேவர் மகன்' கதை, திரைக்கதை எழுதி, பாடி, நடித்து, சிவாஜியுடன் கரம் கோர்த்தார். நேர்த்தியான இயக்கத்திற்கு பரதனை இயக்குநராக நியமித்தார் கமல்.




பிறகு சதிலீலாவதி, குருதிப்புனல் என தொடர்ந்தார். பி.சி. ஸ்ரீராம்க்கு முத்தாய்ப்பான படம் குருதிப்புனல் ஆனது. காந்தி திரைப்படத்துக்கு இணையாக தானே இயக்கிய படம்தான் ஹேராம்.மைக்கேல் மதன காமராஜனுக்குப் பிறகு அதில் வரும் காமேஸ்வரன் கேரக்டரை வைத்து வெளிநாட்டுக்கு போகும் கதையை எடுக்க நினைத்து பின் இயக்குநர் மௌலியை வைத்து நளதமயந்தியை தயாரித்தார். மறக்க முடியாத அனுபவம் தந்த படம் விருமாண்டி. கமல் முழு மூச்சுடன் எழுதிய கதை. இயக்கம், தூக்குத் தண்டனையை தவறு என்று முனைந்து சொன்ன படம். டிஜிட்டலில் சினிமா மாற தானே களமிறங்கி எடுத்த படம் மும்பை எக்ஸ்பிரஸ்.'உன்னைப்போல் ஒருவன்' தயாரித்து மோகன் லால் உடன் நடித்தார்.




விஸ்வரூபம் சினிமாவின் திசை திரும்பிப் பார்க்க வைத்த படம். இதைப் பற்றி பல கதைகள் சமூக வெளியில் உண்டு. கோபப் பட்டதும், பின் குளிர்ந்ததும் விஸ்வரூபம் தந்த அனுபவம். தூங்காவனம், கடாரம் கொண்டான் போன்ற படங்களுக்குப்பிறகு ராஜ்கமல் இண்டர்நேஷனல் நிறுவனத்திற்கு விக்ரம் - 2 திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றுத்தந்தது. லோகேஷ் கனகராஜின் திரைக்கதை உத்தி வெற்றி பெற்ற தென்று சொல்லலாம்.சிவகார்த்திகேயனை வைத்து 'அமரன்' தயாரித்தார் கமல். இதற்கு மகேந்திரன் ஒரு காரணமாக இருந்தார். ஒரு காலத்தில் டி.என்.எஸ்., சந்திரஹாசன் ராஜ்கமலின் தூணாக இருந்தனர். இப்போது மகேந்திரன் இருக்கிறார். 'தக் லைஃப்' - நாயகனுக்குப்பின் மணிரத்தினம் இயக்கிய படம்.







கமல்ஹாசன் எனும் கலைஞன் தமிழ் சினிமாவின் ரசனை உயர்த்துவதற்கு பல்வேறு கால கட்டங்களில் தன் சுய பலத்தில் போராட எடுத்துக்கொண்ட ஆயுதம் தான் 'ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல்' என்கிற தயாரிப்பு நிறுவனம். வெறும் பணம் மட்டும் நோக்கமல்ல. இப்போது நண்பர் ரஜினியை வைத்து தயாரிப்பதும் நாளைய ரசனைக்கு எடுத்துக் காட்டுதான். இதுவரை 'ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல்' நிறுவனம் 27 படங்களை தயாரித்துள்ளது. குறிப்பாக விநியோகத்திலும் ஈடுபட்டுள்ளது. லேடீஸ் ஒன்லி (இந்தி) மருதநாயகம், சபாஷ் நாயுடு படங்கள் நிலுவையில் உள்ளது. காலம் விடை தரும். கமல்ஹாசன் என்றால் 'ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல்' என்ற அடையாளமானது தமிழ் திரை உலகில்.

எல்லா சமூக வலைத்தளங்களிலும் பரபரப்பாக பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு, ஆயிரக்கணக்கான ரசிகர்களை தன் பக்கம் ஈர்த்தது. 'ரஜினியும் கமலும் சேர்ந்து நடிக்கிறார்கள்' என்ற அந்த அறிவிப்பு, சுந்தர் சி இயக்குநராக ஒப்பந்தம் செய்யப் பட்டது, ஆனால், திடீரென எதிர்பாராத சூழலால் சுந்தர் சி விலகுவதாக அறிவித்த வுடன். மீண்டும் ஒரு புதிய பரபரப்புக்குள் சென்று பல்வேறு யூகங்களுடன் அந்தப் படத்தை இயக்கும் இயக்குநர் யார் என்ற மில்லியன் டாலர் கேள்வியுடன் புதிய திருப்பத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கிறது.

-ராசி அழகப்பன்,
திரைப்பட இயக்குநர் / எழுத்தாளர்










ஈரோடு எஸ்.கே.எம். குழுமங்களின் தலைவர், உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்

# பத்மஸ்ரீ எஸ்,கே,எம், மயிலானந்தனுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

ஈரோடு எஸ்.கே.எம். குழுமங்களின் தலைவரும், உலக சமுதாய சேவா சங்கத் தலைவருமான பத்மஸ்ரீ எஸ்.கே.எம். மயிலானந்தன் அவர்களின், பல்வேறு சமூக சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் டெல்லி என்.சி.ஆர். சோனேபட்டில் உள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் - மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கியுள்ளது.

நம்பர் 7ம் தேதி டெல்லி பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற 3வது பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசுத் துணைத்தலைவர் மாண்புமிகு சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு இப்பட்டத்தை வழங்கினார்கள். ஹரியானா ஆளுநர் மாண்புமிகு பேரா.ஆசிம்குமார் கோஷ் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பட்டமளிப்பு விழாவில் சென்னை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வேந்தர் மாண்புமிகு டாக்டர் டி.ஆர். பாரிவேந்தர், டில்லி, ஹரியானா சோன்பட் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வேந்தர் மாண்புமிகு டாக்டர் ரவி பச்சமுத்து, துணை வேந்தர் டாக்டர் பரம்ஜித், எஸ்.ஜஸ்வால், பதிவாளர் பேரா. வி.சாமுவேல்ராஜ் மற்றும் பல முக்கிய நபர்கள் கலந்து கொண்டனர்.




## 23 தீர்மானங்கள் நிறைவேற்றம்

கடந்த 09.11.2025 அன்று சென்னை எழும்பூரில் உள்ள பயாஸ் மஹாலில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் 2025ம் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் நடைபெற்றது. அதில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

●தமிழ் சினமா தற்போது OTT மற்றும் சாட்டிலைட் வியாபாரம் சரிந்து வரும் இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு மற்ற மாநிலங்களில் உள்ளது போல நடிகர்கள் மற்றும் முன்னனி தொழில்நுட்ப கலைஞர்கள் *Revenue Share* படம் நடிக்க வேண்டும் தயாரிப்பாளர்களின் லாப நஷ்டங்களில் பங்கு கொள்ள வேண்டும் என்று பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது. ஆகையால் இனிவரும் காலங்களில் பெரிய பட்ஜெட் திரைப்படங்கள் *Revenue Share*ல் மட்டுமே தயாரிப்பது என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## ‘திரைப்பாடல்களில் உலா வரும் நிலா’ நூல் வெளியீடு




ரௌத்திரம் இலக்கிய வட்டம் சார்பில், கவிஞர் நா.வாசுகி எழுதிய 'திரைப்பாடல்களில் உலா வரும் நிலா' எனும் நூல் வெளியீட்டு விழா. சென்னை வடபழனியில் உள்ள எஸ். ஆர். எம்., அரங்கில் 25.10.2025 அன்று நடந்தது. இதில் இடமிருந்து திரைப்பட இயக்குநர் ஆர். சுப்ரமணிய பாரதி, எஸ். ஆர். எம் ., தமிழ்ப் பேராய தலைவர் கரு. நாகராஜன், காமராஜர் மக்கள் கட்சி தலைவர் தமிழருவி மணியன், முதல் பிரதியை பெற்றுக் கொண்ட சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி, நூலை வெளியிட்ட எஸ். ஆர். எம்., பல்கலை வேந்தர் பாரிவேந்தர், முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன், நூலாசிரியர் நா. வாசுகி நடிகர் அண்ணாதுரை கண்ணதாசன், மற்றும் கவிஞர் இளம்பிறை.

நம் "திரைமொழி" மாத இதழில் தொடராக எழுதிய கட்டுரை 'திரைப்பாடல்களில் உலா வரும் நிலா' எனும் தலைப்பில் நூலாக வந்தை பெருமையுடன் திரை மொழி மாத இதழ் பாராட்டுகிறது.

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**